**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRIC MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

MADATHUKULAM

| | | |
|---|---|---|
| Calender | : | CC 332/2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosectuion (Pw5 ) |
| | : | |
| Name | : | Saravana kumar |
| Father's Name | : | Kannimuthu |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 37 |

Solemnly affirmed in accordance with he provision of act X of 1873

of the 01st day of March 2021

நாள் **CC 332/2019** அ.சா **5**

பெயர் சரவணக்குமார் த/பெ. கன்னிமுத்து

(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு மு.வி)

**நான் கருப்பட்டிபாளையத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன் . ஆஜர் எதிரி கண்ணனை தெரியும் . கருப்பசாமி , கலைசெல்வி, செல்வராஜ் ஆகியோர்களை தெரியும்., அவர்களுக்கு பக்கத்தில் பூமி உள்ளது. அசா 1 கன்னிமுத்து என்து தந்தை ஆவார். அசா 2 சரஸ்வதி எனது அம்மா ஆவார். அசா 3 மயிலாத்தாள் எனது பெரியம்மா ஆவார். அசா 4 சண்முக சுந்தரம் எனது தம்பி ஆவார் . கடந்த 11.12.2016 அன்று மதியம் 03 மணி அளவில் எங்களது தோட்டத்தில் கிழமேல் அணைக்கட்டு பக்கத்தில் உள்ள தடத்தில் நானும் , எனது தம்பி சண்முக சுந்தரமும், மாட்டுக்கு தீனி போட்டு கொண்டிருந்தோம் சத்தம் கேட்டது நாங்கள் ஓடி சென்று பார்த்த போது கண்ணன் , கலைசெல்வி, கருப்பசாமி, செல்வராஜ் ஆகியோர்கள் கையில் தடி வைத்து எனது அப்பா கன்னிமுத்து மற்றும் எனது அம்மா சரஸ்வதியை தலையில் அடித்து கொண்டிருந்தார்கள். நானும், எனது தம்பியும் சென்றோம் நாங்கள் ஓடி வந்ததை பார்த்து அவர்கள் ஓடி விட்டார்கள் . அப்போது எதிரிகள் 4 பேரும் கொல்லாமல் விட மாட்டோம் என்று கூறி வண்டியை எடுத்துக் கொண்டு சென்று விட்டார்கள். எனது பெற்றோர் தலையில் இரத்த காயம் ஏற்பட்டு மயக்கம் நிலையில் இருந்தார்கள் அவர்களை காரில் உடுமலை அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். எனது தந்தையை உடுமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளித்தார்கள். எனது தாயை கோவை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் கோவை அரசு மருத்துவமனையில் அடுத்த நாள் விடியற் காலையில் தலையில் ஆபரேசன் செய்தார்கள். அடுத்த நாள் குமரலிங்கம் காவல் துறையினர் வந்து என்னிடம் என்ன நடந்தது என்று விசாரணை செய்தார்கள்.**

**எதிரிகள் தரப்பிற்கு போதிய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.**